# 58 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப

சென்னை, ஏப்.26-

மின்சார வாரியத்தில் உள்ள 58 ஆயிரம் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று சட்டப் பேரவையில் கே. பாலகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆகிய மானிய கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற்றது. இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் பேசியதாவது;-

மின்துறை நாட்டின் உயிர் மூச்சு போன்றது. தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் முறையாக திட்டமிடாததால் விளைவு, அதிகரித்து வரும் மின் தேவைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. ஆகவே, இதில் கடந்த காலங்களில் நடந்துள்ள முறைகேடுகள், நிர்வாக சீர்கேடுகளால் பெரும் கடன் சுமை ஏற்பட்டுள்ளது. மின் பற்றாக்குறை போன்ற பலவித மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. இது பெரும் கவலை அளிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட ஒருநிலை மீண்டும் ஏற்படாமல் இருக்க மாநில அரசு திட்டமிட்டு செயல்படவேண்டும். இல்லையென்றால் மிக மோசமான நிலைக்கு கொண்டு சென்றுவிடும்.

**மின் துறை அமைச்சர் ஆர். விசுவநாதன்:** அதிமுக ஆட்சியில் முன் எப்போதும் மின்வெட்டு இருந்ததில்லை. இப்போது ஏற்பட்டிருக்கும் மின் பற்றாக்குறைக்கு முந்தைய ஆட்சியே காரணமாகும். முந்தைய ஆட்சி என்றால் அது யாருடைய ஆட்சி என்பதை உறுப்பினர் தெரிவிக்க வேண்டும்.



**கே. பாலகிருஷ்ணன்:** கடந்த கால ஆட்சி என்றாலே அது திமுக ஆட்சி தான். அந்த ஆட்சியில் ஏன் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது என்பதை விளக்கிட ஒரு வெள்ளை அறிக்கை தயார் செய்து வெளியிட வேண்டும்.

**அமைச்சர்:** மின் பற்றாக்குறைக்கும் நிர்வாக சீர்கேட்டிற்கும் யார் காரணம் என்பதை ஏற்கனவே பலமுறை தெளிவாக முதலமைச்சரும் தெரிவித்துள்ளார். எனவே வெள்ளை அறிக்கை என்பது தேவையில்லை.

**கே. பாலகிருஷ்ணன்:** நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் தமிழகத்தைக் காட்டிலும் வட மாநிலத்திற்கு அதிகமாக வழங்கப்படுகிறது. எனவே இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை மத்திய தொகுப்பிலிருந்து கூடுதலாக வழங்க மத்திய அரசை வலியுறுத்தி இந்த அவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றலாம். ஜெனரேட்டர் வாங்க மானியம் வழங்கியுள்ளது நல்லது. அதேநேரத்தில் டீசலுக்கு மானியம் வழங்குவதோடு விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும்.

**அமைச்சர்:** ஜெனரேட்டர்களுக்கு மானியம் வழங்குவதோடு டீசலுக்கு வழங்கும் எண்ணெய்க்கான விற்பனை வரி 5 விழுக்காட்டையும்

## டாஸ்மாக் ஊழியர்களை நிரந்தரம் செய்க

**கே. பாலகிருஷ்ணன்:** அரசுக்கு அதிகமான வருவாய் ஈட்டும் துறையாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை உள்ளது. ஆனால் அதில் பணியாற்றி வரும் ஊழியர்கள் ஒப்பந்த, தொகுப்பூதிய ஊழியர்களாகவே மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களை பணிவரன்முறை செய்து அனைவரையும் நிரந்தரம் செய்ய வேண்டும்.

கடந்த திமுக ஆட்சியில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் என்பதால் இந்த ஆட்சியில் கவனிக்கவில்லை. கடந்த ஆட்சியில் போராட்டம் நடத்தியபோது 215 பேர் மீது போடப்பட்ட வழக்கை திரும்பப் பெற வேண்டும்.

பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மதுபானக் கடைகளை இடமாற்றம் செய்யக்கோரி போராட்டங்கள் நடைபெறுகிறது. அப்போது அதிகாரிகள் ஒப்புக்கொண்டாலும் நடைமுறையில் கடைகளை இடமாற்றம் செய்வதில்லை. மதுவிற்பனையில் கணினி மூலம் ரசீது வழங்கும் முறையைக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் முறைகேடுகளை தடுக்க முடியும். உதாரணத்திற்கு, குடியாத்தம் பகுதியில் அதிகாரிகள் சோதனை செய்தபோது போலி மதுபான பாட்டில்களை பறிமுதல் செய்தனர். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**அமைச்சர்:** போலி மதுபானங்கள், கடத்தல் மதுபானங்கள், வரி ஏய்ப்பு செய்யும் மதுபானங்களை முற்றிலும் தடுக்க வேண்டும் என்பதற்காக இந்தக் குற்றங்களில் ஈடுபடுபவர்களை இரும்புக்கரம் கொண்டு முதல்வர் கடுமையான நடவடிக்கை எடுத்துவருகிறார். இதில் எங்கேயாவது தவறு நடந்திருப்பதை உறுப்பினர் சுட்டிக்காட்டினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் அங்கு நடவடிக்கை எடுக்கத்தவறிய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# வேண்டும்: கே. பாலகிருஷ்ணன்

## நியாயமாக நடந்து கொள்ளாத ஆணையம்

**கே. பாலகிருஷ்ணன்:** ஒழுங்கு முறை ஆணையம் மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. அரசு சலுகை வழங்கியுள்ள ரூ.740 கோடியைக் கழித்திருந்தாலும் ஆண்டுக்கு ரூ. 7ஆயிரம் கோடிக்கு மேல் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதால் மக்களுக்கு பெரும் சுமையாக உள்ளது.

ஒழுங்கு முறை ஆணையம் கட்டணத்தை தீர்மானிக்கும்போது நியாயமாக நடந்து கொள்ளவில்லை. உதாரணத்திற்கு, உயர் அழுத்த மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ரூ.4.60ல் இருந்து ரூ.5.50ஆக உயர்த்தியுள்ளனர். ஆனால், வணிக நிறுவனங்கள் சிறுகடையாக இருந்தாலும் ஒரு யூனிட்டுக்கு ரூ.5.90ல் இருந்து ரூ.7ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**அமைச்சர்:** தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நீதிமன்ற அதிகார வரம்பைப் பெற்றது. இதை விமர்சிக்க முடியாது. ஆணையம் உயர்த்திய கட்டணத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். வேண்டுமானால், மானியம் வழங்கிக் கொள்ளலாம். அதன் அடிப்படையில்தான் அனைத்துத் தரப்பினருக்கும் அரசு மானியம் வழங்கி பாதுகாப்பு அளித்துள்ளது.

முழுமை யாக மாநில அரசு ரத்து செய்துள்ளது.

**கே. பாலகிருஷ்ணன்:** வீட்டுப் பயனீட்டாளர்கள் 1.4 கோடி பேருக்கு சிறு குழல் (சிஎஃப்எல்) விளக்கு பொருத்துவதன்மூலம் 500 முதல் 600 மெகாவாட் சேமிக்க முடியும். ஆகவே இதற்கு உரிய நிதி ஒதுக்கி அரசே விளக்குகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அமைச்சர்:** குடிசைப் பகுதியில் இலவச மின் இணைப்பைப் பெற்றுள்ள சுமார் 16 லட்சம் பயனாளிகளுக்கு சிஎஃப்எல் விளக்குகள் இலவசமாக வழங்க முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார். விரைவில் விளக்குகள் வழங்கப்படும்.

**கே. பாலகிருஷ்ணன்:** 1980ஆம் ஆண்டு முதல் அமலாக்கப்படும் ரூரல் ஃபீடர் அதாவது கிராமப்புற மும்முனை கட்டுப்பாட்டு திட்டம் நடைமுறையில் தோல்வி அடைந்துவிட்டது. எனவே அதனை ரத்து செய்ய வேண்டும். மின்சாரம் பற்றாக்குறை இருக்கும்போதுதான் பாகுபாடு காட்டப்படுகிறது. மிகுதியாக இருக்கும்போதாவது நகரம், கிராமப்புறம் என்ற பாகுபாடு இல்லாமல் ஒரே சீராக சமநிலையில் மின்சாரம் வழங்க வேண்டும்.

**அமைச்சர்:** மின்பற்றாக்குறை இருக்கும்போது மட்டும் அல்ல. அதிகமாக இருக்கும்போதும் நகரம், கிராமம் என்ற பாகுபாடு காட்டுவதில்லை.

**கே. பாலகிருஷ்ணன்:** மின்சார வாரியத்தில் காலியாக உள்ள 58ஆயிரம் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். மின்சார வாரிய ஊழியர்களுக்கு மாற்று ஒப்பந்தம் செய்து ஊதிய உயர்வை வழங்க வேண்டும்.

சிறிய, நடுத்தர கறிக்கோழி விவசாயிகள், காய்கறி, பழவகை, பூ சாகுபடிக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும். ஓய்வூதியம், கருணைத்தொகை பெறுபவர்களுக்கு பஞ்சப்படி வழங்குவதில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும்.

**அமைச்சர்:** ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்தம் 2011ல் முடிவடைந்துவிட்டது. புதிய ஒப்பந்தம் போட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு தொழிற்சங்கங்களின் கருத்தைக் கேட்டபிறகு அளிக்கும் ஒப்புதலின் அடிப்படையில் இறுதி செய்யப்படும்.

**கே. பாலகிருஷ்ணன்:** பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் அனல்மின் நிலையம் தொடங்க 12 கிராமங்களில் இருந்து சுமார் 9 ஆயிரம் ஏக்கர் நிலம் மாநில அரசால் கையகப்படுத்தப்பட்டது. அந்த நிலம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் அப்படியே உள்ளது.

தமிழ்நாட்டில் நிலக்கரி பற்றாக்குறையாக உள்ளது. அந்தப் பகுதியில் நிலக்கரி இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, ஒன்று, நிலக்கரியை வெட்டி எடுக்க வேண்டும். இல்லையென்றால் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமே நிலத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

**அமைச்சர்:** ஜெயங்கொண்டம் மட்டுமல்ல. இன்னும் பல திட்டங்கள் கடந்த ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்படாமலே விட்டுச் சென்றனர்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## மின்வெட்டு: உண்மை நிலை என்ன?

**கே. பாலகிருஷ்ணன்:** தற்போது ஏற்பட்டுள்ள மின்பற்றாக்குறையை சமாளிக்க அரசு விதித்துள்ள சில கட்டுப்பாடுகள் குறித்து கொள்கை விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில், சென்னை, புறநகருக்கு 2 மணி நேரமும், கிராமப்புறங்களுக்கு 4 மணி நேரமும், விவசாயத்திற்கு 6 மணி நேரமும் மின்வெட்டு அமலில் இருக்குமென்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் உண்மை நிலையோ அதற்கு மாறாக உள்ளது. கிராமப்புறங்களில் ஒரு நாளைக்கு 10 மணி நேரம் வரை மின்வெட்டு அமலில் உள்ளது. விவசாயத்திற்கு 3 மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டிருக்கும் மின்பற்றாக்குறையை சரி செய்வதற்கு நீண்ட காலம் ஆகலாம். ஆகவே, குறுகிய கால நடவடிக்கையாக இரவு நேரங்களில் மின்வெட்டு செய்வதை தவிர்க்க வேண்டும். இதனால் மக்கள் இரவு நேரங்களில் தூங்க முடியாமல் பெரும் மனஉளைச்சலுக்கு ஆளாகிறார்கள். எனவே இரவு நேரத்தில் மின்வெட்டு என்பதை அடியோடு ரத்து செய்ய வேண்டும்.

கம்
தீக்கதிர் 27-4-2012
சென்னை